

சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் எஸ்.ஐ.ஆர். குறித்த ஆலோசனை கூட்டம் சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க. கணபதி, ஏ.எம். வி. பிரபாகர்ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா. விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ண மூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.இராசா, எம்.விநாயகமூர்த்தி, வே.ஆனந்தம், நொளம்பூர் வே.ராஜன், எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு பார்க்கிங் வசதி மற்றும் நாகூர் சில்லடி தர்கா கடற்கரையில் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெறுவதை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முன்னேற்பாடு பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், வை.செல்வராஜ்எம்பி, மாவட்ட செயலாளர் என். கௌதமன், ஜெ.முகம்மது ஷா நவாஸ் எம்.எல்.ஏ, நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து ஆகியோர் உள்ளனர்.

### நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற தர்காவின்

# 469 வது கந்தூரி சந்தனக்கூடு திருவிழா - முன்னேற்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் -அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

நாகப்பட்டினம், நவ.10

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி சந்தனக்கூடு திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி எஸ்.எம்.நாசர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி திருவிழாவானது எதிர்வரும் 21.11.2025 முதல் 30.11.2025 வரை சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற நோக்கில் இத்திருவிழாவின் முக்கிய விழாவான சந்தனக்கூடு ஊர்வலம் 30.11.2025 அன்று இரவு நடைபெற உள்ளதை முன்னிட்டு துறைகள் வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில்

வருவாய்த்துறையினர் ஊர்வலம் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மற்றும் ஊர்வலம் சிறப்பாக நடைபெறவும், நகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் நாகப்பட்டினம் முதல் நாகூர் அருகில் உள்ள குப்பைகளை அகற்றி, ப்ளீச்சிங் பவுடர் தினமும் தெளிக்க சுழற்சி முறையில் சுமார் 100 தூய்மைப்பணியாளர்கள், குப்பைகளை அகற்ற 4 டிராக்டர்கள் பழுதடைந்த தெரு விளக்குகள், சாலைகளை சரி செய்திடவும் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக ஆங்காங்கே 30 தற்காலிக கழிவறைகள் அமைத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பக்தர்கள் அதிகம் கூடும். 10 இடங்களில் குடிநீர் தொட்டி வசதி மற்றும் குளோரிசன் செய்யப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்கிட நடவடிக்கை, வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக 03 பார்க்கிங் வசதி ஏற்பாடு, ஊர்வலம் வர ஏதுவாக நாகப்பட்டினம் முதல் நாகூர் வரை சாலையில் உள்ள வேகத்தடைகளை அகற்றி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காவல்துறையினர் சார்பில் நாகூர் கந்தூரி விழாவின் போது நாகப்பட்டினம் முதல் நாகூர் வரை உள்ள பகுதிகளிலும் மற்றும் தர்காவை சுற்றியுள்ள பகுதிகளிலும் உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 15 துணைக்காவல் கண்காணிப்பாளர்கள். 45 காவல் ஆய்வாளர்கள், 119 உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் 987 காவலர்கள் உள்பட சுமார் 1100 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 10 உயர் கண்காணிப்பு கோபுரங்கள் (Watch Tower). வான்வழி கேமராக்கள் (Drone Camera). 80க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் 24 மணி நேரமும் செயல்படும் காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், சாலை விபத்துக்களை தடுப்பதற்கு 03 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் ரோந்து பணியில் ஈடுபடுத்தபட உள்ளது. நாகூர் தர்காவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உதவியாக காவல் உதவி மையமும், திருட்டு, செயின் பறிப்பு உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் ஏதும் நடைபெறா வண்ணம் தடுக்க 01 ஆய்வாளர் தலைமையில் 25 குற்ற தடுப்புப்பிரிவு காவலர்கள் மற்றும் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழப்பு குழுவினர் (BDDS) பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சுந்தூரி திருவிழாவினை முன்னிட்டு, கொடி ஊர்வலம் நடைபெறும் நாளான 21.11.2025 மதியம் முதல் 22.11.2025 அதிகாலை வரை மற்றும் சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெறும் நாளான 30.11.2025 இரவு முதல் 01.12.2025 அதிகாலை வரை வாகனங்கள் ECR புத்தூர் சாலை மார்க்கமாக செல்ல போக்குவரத்து மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஊர்வலம் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும். வாகனம் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர வேறு இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அப்புறப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் சந்தனக்கூடு அன்று ஊர்வலம் செல்லும் நாளில் மின் ஒயர்களால் பாதிப்பு ஏற்படாதவாறு தொய்வான நிலையில் உள்ள மின் ஒயறுகளை முன்கூட்டியே சரி செய்திட வேண்டும். நெடுஞ்சாலைத்துறையினர் கனிவான கவனத்திற்கு நாகப்பட்டினம் காரைக்கால்இசிஆர் சாலை மற்றும் ஈசிஆர் நாகூர் தர்காவிற்கு செல்லும் சாலையிலும் வேகத்தடை அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். பிஎஸ்என்எல் சார்பில் தடையில்லா தகவல் தொடர்பினை உறுதி செய்திட வேண்டும். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தேவைக்கேற்ப ஆம்புலன்ஸ் வாகனங்களை முக்கிய இடங்களில் நிறுத்தி வைக்கவும், 6 மருத்துவ முகாம்கள் மற்றும் 07 நகரும் மருத்துவ வாகனம் அமைத்து இலவச மாத்திரைகள விநியோ கத்திடவும், மெர்ஜென்சிக்கான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறை சார்பில் சாலைகளில் சுற்றி தெரியும் தெரு நாய்கள் மற்றும் கால்நடைகளை அப்புறப்படுத்திடவும், தீயணைப்பு துறை சார்பில் தர்கா குளம் மற்றும் நாகூர் கடற்கரையில் அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் 68 தியணைப்பு துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர். மேலும் பைபர் படகுகளை தயார் நிலையில் வைத்து, விபத்து சமயத்தில் உதவ நீச்சல் வீரர்கள் மற்றும் தன்னார்வலர்களை தயார் நிலையில் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலர் சார்பில் விழா காலங்களில் நாகூர் இரயில் நிலையத்திலிருந்து தர்காவிற்கு வரும் பக்தர்களுக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் அதிக கட்டணம் வசூள் செய்வதை கண்காணித்து அதிக கட்டண தொகை வசூல் செய்தால் உடனே அவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முன்கூட்டியே ஆட்டோ ஓட்டுநர்களை அழைத்து ஆய்வு கூட்டம் நடத்திட வேண்டும். பொதுப்பணித்துறை சார்பில் தர்கா குளத்தில் நான்கு முனைகளிலும் உயர் கோபுர விளக்குகள் பொருத்தவும், குளத்தை சுற்றி மூன்று நடைபாதைகளிலும் குப்பை தொட்டிகள் வைக்க வேண்டும் போக்குவரத்து துறையினர் சார்பில் கந்தூரி விழாவினை முன்னிட்டு கூடுதலாக 45 சிறப்பு பேருந்துகளை இயக்கப்படுவதை உறுதி செய்து, கந்தூரி விழாவிற்கு வெளி மாநிலத்திலிருந்து பக்தர்கள் வருகை புரிவதற்கு முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஸ்டிக்கர் ஒட்டிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், நாகப்பட்டினம் நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் தரா.சங்கர நாராயணன், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் டி.லீனாசைமன், நாகப்பட்டினம் நகரமன்ற துணைத்தலைவர் செந்தில்குமார், நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப், நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப், மாநில சிறு பான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் உடனிருந்தனர்.

### எம்.விநாயகமூர்த்தி தலைமை! வேளச்சேரி கிழக்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்

# ரா.தினேஷ் (எ) கபாலி திருமண வரவேற்பு விழா: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துகிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி. – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. – பெ.ராஜி பங்கேற்பு!

சென்னை, நவ. 10 -



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை தெற்கு மாவட்டம், அடையார் என்.ராஜா - ஆர்.மஞ்சுளா ஆகியோரின் இளைய மகன் வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரா.தினேஷ் (எ) கபாலிக்கும், சென்னை, எஸ்.வெங்கடேசன் - வி.ராஜலட்சுமி ஆகியோரின் புதல்வி வெ.நிவேதா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (10.11.2025 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணிக்கு மேல், திருவான்மியூரில் உள்ள பாபுலால் பவன் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் எம்.விநாயகமூர்த்தி தலைமை வகிக்கிறார்.

வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, துரை கபிலன், எம்.ராதிகா எம்.சி, அடையார் சி.சுரேஷ், அ.ரவிகிருஷ்ணன், த.செல்வம், கி.ஆனந்த், ப.சின்னத்தம்பி, எஸ்.சதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பெ.ராஜி, ஆ.பாண்டியன், எஸ்.ஜெயக்குமார், வழக்கறிஞர் ம.தமிழரசு, மு.தனசேகர், க.கணேஷ்குமார், வி.எம்.டி.ராஜாராமண்ன் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி. என்.சோமு, துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஜே.எம். எஸ்.மௌலானா, ப.தாயகம் கவி, ஏ.வி.எம்.பிரபாகர ராஜா, காரம்பாக்கம் க.கணபதி,

மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, வாசுகி பாண்டியன், சாய் ஜெயகாந்த், அடையார் பி.ஜெ.பாஸ்கர், ஆர்.பாலசுந்தரம், சி.பரிமேலழகன்,

மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி, எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன், எம்.சி, ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.வெங்கடேசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், தரமணி த.ஜெகதீசன், கழக த.ரமேஷ், நா.மகேஷ் கண்ணா, பா. அருண்குமார், நா.மணிகண்டன், அஞ்சல் என்.ராமன், கோ.பாஸ்கரன், கொட்டிவாக்கம் ம.பார்த்திபன், எம்.ஆர்.சசிகுமார், அ.விஜயபாலா, ராமபுரம் வி. ராஜேஷ், கனிமொழி தனசேகரன், கே.குமரேசன், நிஷா சையத், மருத்துவர் அனீஷ், எஸ்.பி.அருள், வி. ஜெயச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் விசாலாட்சி கபிலன், கயல்விழி ஜெயக்குமார், சுபாஷினி துரை, பகுதி கழக நிர்வாகிகள், வட்டசீ செயலாளர்கள் அருணா வேலாயுதம், வழக்கறிஞர் எஸ்.சந்தானம், ஆ.ச.ஸ்ரீகாந்த், கே.சி. வனஜா,

மாவட்டப் பிரதிநிதிகள் எம்.பி.ராஜேஷ், டி. பாலாஜி, எஸ்.கலைவாணன், வழக்கறிஞர் எஸ். கோபால், சி.சுரேஷ், ம.தங்கம், இரா.மாரியப்பன், எஸ்.ரவிச்சந்திரன், செ.சிகாமணி, அ.ச.மனோகரன் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ.வேலு முன்னிலையில் விளையாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் பரத் ஏற்பட்டில் முன்னாள் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஐயா எம்.ஆர். வெங்கடேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாவட்ட கழக செயலாளர் – இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சின்னதம்பி தெரு, குயப்பேட்டையில் பொது மக்களுக்கு உணவு வழங்கினார். உடன் கோ.ஏகப்பன், புரசை.கோ.மணி, வட்ட கழக செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு, சி.சேகர், ரங்கநாதன், வி.அபாய், தி.தயாளன், புலவர் சாமிநாதன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.


